# நாடகமும் அரங்கியலும்
# DRAMA AND THEATRE

**பரீட்சைக்கான வழிகாட்டி**

க. பொ. த. உயர்தரம்

**G. C. E. (A/L)**

**பகுதி 1ன் பிரிவு 1க்கான**

## இலகு
# வினா விடைகள்
**(200)**

ஆக்கம்:-

**M. M. மயூரதாஸன்**

மீள்பார்வை:-

**T. K. பிரியன்**

வெளியீடு:-

யுரேனியம் கல்வி நிலையம்

(ஸ்ரீ ராம மந்திரம்), கனகசபை வீதி,

மானிப்பாய்.

40/-

# நாடகமும் அரங்கியலும்
# DRAMA AND THEATRE

**பரீட்சைக்கான வழிகாட்டி**

க. பொ. த. உயர்தரம்

**G. C. E. (A/L)**

**பகுதி 1ன் பிரிவு 1க்கான**

# இலகு வினா விடைகள்
**(200)**


ஆக்கம்:-

**M. M. மயூரதாஸன்**

மீள்பார்வை:-

**T. K. ரிரியன்**



வெளியீடு:-

**யுரேனியம் கல்வி நிலையம்**

**(ஸ்ரீ ராம மந்திரம்), கனகசபை வீதி,**

**மானிப்பாய்.**

## அர்ப்பணம்!!!



‘ஆடிவா எனவிட்டு அழகு நடை பார்ப்பாயே
ஆசைகள் வளரவிட்டு அவை முடிப்பேன் என்பாயே
கோடியறிவுரைகள் கூறுவாய் நீ கிழித்த
கோட்டிற்குள் நிற்பதற்குன் குரலைக் கேட்பேனோ
தேடி அழுகிறேன் தென்பட மாட்டாயோ
தீயிட்டேன் உனக்குமினித் திரும்பிவர மாட்டாயோ
வாடிக் கிடக்கின்றோம் வந்து முகம் பாரம்மா
வருங்கால மொன்றிருந்தாலென் வாசலுக்கே
வாருமம்மா!

அடியேனையும் ஈன்று புரந்தந்து இந்நிலைக்கு
ஆளாக்கி

எழுத்துலகில் மலர வைத்து

மறைந்திருந்து வழிகாட்டும் ‘மதுரச் செல்வி’
என்னன்னை ஞானசக்திக்கு இந்நூல்



---

## சமர்ப்பணம்

---

# என்னுரை

நாடகமும் அரங்கியலும் பாடமானது இன்றைக்கு இரண்டு தசாப்த காலத்திற்கு முன்பே க. பொ. த. உயர் தரப் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1979 முதல் தொடர்ச்சியாகப் பரீட்சைகள் நடாத்தப்பெற்று தொடராக பல்கலைக் கழகத்திற்கும் தெரிவு செய்யப்படு கிறார்கள். விசேட கற்கை நெறியாகவும் நாடகத்துறை பல்கலைக் கழகத்தில் காணப்படுகின்றது. இருந்தும் பல மாணவ மாணவிகள் இதில் இணைய தவறி விடுகின்றனர். இதற்கு இவர்கள் மத்தியில் ஒரு ஆழமான நாடக பார்வை இல்லை என்பதே எனது கண்ணோட்டம்.

இன்று எம் மத்தியில் நல்ல நாடகப் புத்தகங்கள் மிக்க் குறைவாகவே தமிழிலே காணப்படுகின்றன. இத னால் நாடகத்துறை சார்பான அறிவினைப் பெற்றுவிட எல்லா மாணவர்களாலும் முடியாத நிலை ஒன்று காணப் படுவது ஈன்று நோக்கத்தக்கது (குறிப்பிடத்தக்கது). இதனைப் போக்கும் முகமாக நாடகாசிரியர்கள், நாடகத் துறை சார்பானவர்கள் அனைவரும் நல்லமுறையில் நாட கத்துறை சார்பான நூல்களை அச்சிட்டு வெளியிட வேண் டும் என்பதே எமது விருப்பம். இந்த ரீதியில் இந்நூல் ஓரளவேனும் மாணவ சமுதாயத்திற்கும், நாடகத்துறை சார்ந்த அனைவருக்கும் உதவும் என எதிர்பார்க்கிறேன்.

இந்நூலானது நாடகமும் அரங்கியலும் பாடத்தின் பகுதி 1ன் பிரிவு 1ற்கான வினாக்கள் பரவலாக உள்ளடக் கப்பட்டுள்ளது. இந்நூலை வெளியிட உதவி புரிந்த யுரே னியம் கல்வி நிலையத்தாரிற்கும், நல்லமுறையில் அச்சடித்து (அழுத்தம்) செய்து தந்துதவிய ஷாமளி அச்சகத்தினருக்கும் சகலவிதங்களிலும் உதவியும் ஒத்தாசையும் அன்பும், ஆதர வும் பலதரப்பட்ட நிலையிலும் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள் என்றுமே உண்டு.

நன்றி.

யுரேனியம் கல்வி நிலையம்
(ஸ்ரீ ராம மந்திரம்) கனகசபை வீதி,
மானிப்பாய்.

**திரு. M. M. மயூரதாஸன்**

## வினா விடை

01) நாடகம் என்ற சொல்லைக் குறிக்கும் பழந்தமிழர் சொல்

கூத்து

02) கலையை இரண்டாகப் பிரிக்கலாம். அவை

1) பயன்பாட்டுக்கலை

2) நுண்கலை

03) கலை என்பதன் பொது வரைவிலக்கணம்

அழகை முதன்மையாகக் கொண்டு மனித திறனின் வெளிப்பாடாக மீள் உருவாக்கம் செய்யமுடியாதன அனைத்தும் கலை. (இது அவரவர் அகம் சம்பந்தப் பட்டது)

04) கலை இரண்டு பகுதிகளைக் கொண்டது

1) உருவம் 2) உள்ளடக்கம்

05) கலை, கைவினை வேறுபடுத்துக

மீள் உருவாக்கம் செய்ய முடியாதவை கலை.

மீள் உருவாக்கம் செய்யக் கூடிய அனைத்தும் கை வினை.

06) ஒரு பொருள் எப்போது கலை ஆகின்றது என்ற கேள்வி ஊடாக விடை கூறும் அறிஞன் யார்?

நெல்சன் குட்மன்

07) செவிப்புலக் கலைகள் எவை?

இசை

08) கட்புலக் கலைகள் எவை?

ஓவியம், சிற்பம், கட்டிடம்

09) கட்புல செவிப்புலக் கலைகள் எவை?

நாடகம், நடனம், சினிமா (சலனப்படம்)

10) வெளிக் கலைகள் எவை?

ஓவியம், சிற்பம், கட்டடம்

11) கால வெளிக் கலைகள்

நடனம், நாடகம், சினிமா

12) காலக் கலை எவை?

இசை

13) ஆக்கும் கலைகள்

ஓவியம், சிற்பம், கட்டிடம்

14) ஆற்றுகைக் கலை என்றால் என்ன?

கலைஞன் தன்னைத் தானே செதுக்கிக் கொண்டு படைக்கும் கலைவடிவங்கள் அனைத்தும் ஆற்றுகைக் கலைகளாகும்.

15) ஆற்றுகைக் கலைகளிற்கு உதாரணம் தருக?

இசை, நாடகம், நடனம்

(சில வரையறைகளோடு சினிமாவும் அடங்கும்)

16) நடனம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக?

வெளிக்கும் மனித உடலிற்கும் இடையிலான லய பூர்வமான அசைவு

17) உடல் மொழியைப் (Body Language) பிரதான மாகக் கொண்ட ஆற்றுகைக் கலைகள்

நடனம், நாடகம், சினிமா

18) கீழைத்தேச இசையை எவ்வாறு அழைப்பர்

ஒத்திசைவு (Harmany)

19) மேலைத்தேச இசையினை எவ்வாறு அழைப்பர்

சிம்பனி (Sympony)

20) கேட்கப்படுகின்ற இசையானது பார்க்கப்படுகின்ற இசையாக எங்கே உருவாகின்றது

அரங்கிலே ஆற்றுகைப் படுத்தப்படுகின்ற போது

21) பாடலூடாக காட்சியைச் சொல்லும் மரபு எந்த மரபில் காணப்படுகிறது

கூத்து மரபில்

22) நாடக பாடம் எப்பொழுது முழுமை அடைகின்றது

ஆற்றுகை நிலைக்கு உட்படுகின்ற பொழுது

23) நாடக பாடம் எதனை அடிப்படையாகக் கொண்டது

இலக்கியத்தினை

24) அரங்க மூலகங்களை அடிப்படையில் நான்காக வகுத்துக் காட்டியவர்

பீற்ற புறூக்

25) அவை எவை?

ஒளி, மொழி, அசைவு, வெளி

26) நடித்தலின் அடிப்படைச் செயற்பாடு

உருமேற் கொள்ளல் (ஆள்மேற் கொள்ளல்)
(போலச் செய்தல்)

27) நடிப்பு முறைமையினை அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம். அவை

1) யதார்த்த நடிப்பு முறைமை
2) யதார்த்த விரோத நடிப்பு முறைமை

28) யதார்த்த நடிப்பு என்றால் என்ன?

வாழ்வினை மிகவும் ஒத்த நடிப்பு முறைமை

29) யதார்த்த விரோத நடிப்பு முறை என்றால் என்ன?
வாழ்க்கை பற்றி வியாக்கியானமாக அமைவது

30) 'முறைமைக் கோட்பாட்டை' அறிமுகப்படுத்தியவர்

'சனிஸ்ல வெஸ்கி'

31) 'சனிஸ்ல வெஸ்கியின்' சொந்த நாடு யாது?

ரஸ்சியா

32) 'முறமைக் கோட்பாடு' உணர்த்தும் நடிப்பு எத்த கையது?

'உண்மையான நடிப்பு'

33) உண்மையான நடிப்பினை உருவாக்குவதற்கு சனிஸ்ல வெஷ்கி எந்த வழிமுறையைப் பின்பற்றுகின்றார்

நடிகன் நனவு, நனவிலி மனத்திற்கிடையான பயணம் மூலம் உருவாக்கலாம் (மேல்மன - அடிமனம்) என்கிறார்.

34) சனிஸ்ல வெஸ்கியின் பிரதான மாணவராகக் கருதப் பட்டவர் யார்?

'மேயர் கோல்ட்'

35) மேயர் கோல்ட்டின் நடிப்பு முறமை யாது?

'உடற் பொறிமுறை'

36) பார்வையாளரும் நடிகரும் சேர்ந்து செய்யும் விவாத களமாக நாடகத்தைக் கருதியவர்?

'மேயர் கோல்ட்'

37) மேயர் கோல்ட், சனிஸ்ல வெஸ்கியின் அரங்கை எவ் வாறெல்லாம் விமர்சித்தார்?

1) அரசியல் தன்மை அற்றது
2) புரட்சிக்குப் பிந்திய ரஸ்சியாவிற்கு உதவ முடியாதது.
3) மேட்டுக் குடி இயல்புடையது

38) மேயர் கோல்ட் உருவாக்க முனைந்த பார்வையாளர் எத்தகையோர்?

செயல்முனைப்புடைய பார்வையாளர் (Active Audi ence) (பார்வையால் அரங்கை ஆளுகை செய்கின்ற)

39) காவிய அரங்கினை உருவாக்கியவர் யார்?

பேட்டோல் பிரெச்

40) நடிப்பை தொலைப்படுத்த 3 வழிமுறைகளை பிரெச் எடுத்துக்காட்டி உள்ளார் அவை எவை?

1. மேடை இயக்கங்களை வெளிப்படையாகஉரத்துச் சொல்லல்
2. படர்க்கை நிலைக்கு எடுத்துச் செல்லல்
3. இறந்த காலத்திற்கு இட்டுச் செல்லல்

41) அரசியல் பிரச்சாரத்திற்கு அரங்கை அழகியல் பூர்வ வமாகப் பயன்படுத்தியவர் யார்?
மேயர் கோல்ட்

42) கதாபாத்திரத்தின் அனுபவத்தினை தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்றவர் (தன்னுள் காணவேண் டும் என்றவர்)
'சனிஸ்லவெஸ்கி'

43) கடந்த கால நினைவுகளை மீட்பதற்கு சனிஸ்ல வெஸ்கி அறிமுகப்படுத்திய பயிற்சி?
மனதை ஒருமுகப்படுத்தல் (குவியச் செய்தல்)

44) அரங்கில் மாயையை உருவாக்க விரும்பாதவர்?
மேயர் கோல்ட்

45) மேயர்கோல்ட் பயன்படுத்திய உடல்மொழி
குறியீட்டு ரீதியான உடல்மொழி

46) அரங்கில் செய்தியை பரிமாற்றுவதே முக்கிய நோக் காக கொண்டு செயற்பட்டவர்?
மேயர் கோல்ட்

47) பாத்திரங்கள் அனைத்தையும் ஒரேநிற ஆடை அணிந்து அரங்கில் செயற்படுத்தியவர்?
மேயர் கோல்ட்

48) நடிகனின் நல்ல நடிப்பிற்கு கடுமையான பயிற்சியே உதவும் எனக் கூறியவர்?
சனிஸ்லவெஸ்கி

49) 'நடிகன் பாத்திரமாகவே வாழ வேண்டும்' என்று கூறும் நாடகாசிரியர்?

சனிஸ்லவெஸ்கி

50) கதாபாத்திரங்களுடன் நடிகர்கள் ஒன்றிவிடாது அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தியவர்?
மேயர் கோல்ட்

51) மேயர் கோல்ட் தனது அரங்கை பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திய அதே நேரம் வேறு எவற்றிற்குப் பயன்படுத்தினார்?
அறிவூட்டல் (கல்வியூட்டலிற்கும் பயன்படுத்தினார்)

52) பாத்திர நிலைப்படுதல் என்றால் என்ன?
உருமேற்கொள்ளல் (நடிகன் தன்னில் கதாபாத்திரத்தினைக் காவுதல்)

53) பார்ப்போர் அமர்ந்திருக்கின்ற முறமை, நுழைவுச் சீட்டு, சுவரொட்டிகள் யாவும் சேர்ந்ததே காண்பியம் எனக் கூறுபவர்?
மாட்டின் எஸ்கின்

54) நாட்டிய சாஸ்திரத்திலே நடித்தலின் கூறுகளைப் பரதர் எவ்வாறு கூறுகின்றார்

அபிநயம்

55) உடல் உறுப்புக்களால் தொடர்பாடுகின்ற அபிநயம் யாது?

ஆங்கிக அபிநயம்

56) வேட உடை ஒப்பனை மற்றும் சாதனங்களால் தொடர் பாடல்
ஆகாமிய அபிநயம்

57) முகபாவத்தின் ஊடாக தொடர்பாடுவது
சாத்வீக அபிநயம்

58) ஒலிகளினால், குரலினால் தொடர்பாடல்
வாசிக அபிநயம்

59) செவிப்புல ரீதியான தொடர்பாடல் கொண்ட அபிநயம்

வாசிக அபிநயம்

60) கட்புல ரீதியான தொடர்பாடல் கொண்டவை

ஆங்கிய, ஆகாரிய, சாத்வீக அபிநயங்களாகும்

61) நாடகத்தில் வேடப்புனைவு ஏன் முக்கியமாகின்றது?

நடிகன் தன்னிலே கதாபாத்திரத்தினைக் காவுவதற்கு

62) நாடகபாடமானது எப்போது அதன் முழுவடிவத்தையும் பெறுகின்றது?

அரங்க ஆற்றுகையின் போது

63) பரதர் தனது நடிப்புப் பற்றிய கோட்பாட்டினை எந்த நூல் ஊடாகக் கூறுகின்றார்?

நாட்டிய சாஸ்திரம் ஊடாக

64) பரதர் கூறும் நால்வகை அபிநயங்களும் எவை?

ஆங்கியம், ஆகாரியம், சாத்வீகம், வாசிக அபிநயங்கள்

65) கண்ணிற்குப் புலனாகாத அரங்கின் ஊடாக ஆற்றுகை செய்தவர் யார்?

ஒகஸ்ராப் போல்

66) நாடகத்தின் ஒரு கட்டம் வரை நடிகர்கள் வளர்த்து வர இறுதிப்பகுதி பார்வையாளரால் நெறிப்படுத்தப் படும் அரங்கு?

'வாத விவாத அரங்கு'

67) குறட்டஸ்கீயினுடைய அரங்கு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

பரிசோதனை அரங்கு

68) ஆற்றுகைக்கான பிரதான மூலக்கூறுகளாக குறட்டஸ்கீ கூறுபவை என்ன?

குரல், அசைவு, ஒலி, லயம், வெளி முதலியன கையாளும் முறை.

69) ஒரு புதிய சிந்தனைத் தளத்தில் கொண்டு செல்ல இளைஞர்களே அதிகளவு நெகிழ்வுடையவராக இருப்பர் எனக் கூறிய நடிகர்

குறட்டஸ்கீ

70) நடிகர்கள் ஒரு இடத்தில் குழுகுழுவாக வாழுதல் அதன்மூலம் பெறப்படுகின்ற அனுபவத்தின் ஊடாக நடித்தல்' என்ற கொள்கை உடையவர்?

குறொட்டஸ்கீ

71) நாட்டிய சாஸ்திரம் இரண்டு வகையான நடிப்பு மோடிகளை கூறுகின்றது அவை எவை?

1. நாட்டிய தர்மி
2. லோக தர்மி

72) பாவத்தினால் பிரதானப்படுத்துவதாகக் காணப்படுவது?

லோக தர்மி

73) மெய்யசைவுக் குறிகளைப் பிரதானப்படுத்துவதாக காணப்படுவது?

நாட்டிய தர்மி

74) தாண்டவம் என்பது?

முரட்டுத்தனமான சுற்றே பெருப்பிக்கப்பட்ட ஆடல் (ஆண்களிற்குரியது)

75) லாசியம் என்பது

மென்மையானதாகவும், தனிமையானதாகவும் பெண்களிற்கே உரியதாகவும் காணப்படும் அபிநயம்

76) தஸரூபத்தை எழுதியவர் யார்?

தனஞ்ஜயன்

77) ஐந்தாவது வேதமென சமஸ்கிருத மரபிலே அழைக்கப்படுவது யாது?

நாட்டிய சாஸ்திரம்

78) நாடகத்தினை நடத்துபவரை சூத்திரதாரி என்று சொல்லும் மரபு எங்கே காணப்படுகின்றது?

சமஸ்கிருத மரபில்

79) 'ரசம்' என்ற சொல்லின் பொருள் என்ன?

சுவையாகும்

80) நாட்டிய சாஸ்திரம் கூறும் ரசங்கள் எத்தனை?

எட்டு

81) ரசங்களைத் தருக?

சிருங்காரம், காசியம், கருணை, றௌவுத்திரம், வீரம், பயானகம், வீபட்சம், அற்புதம்

82) 'பரத' என்ற சொல்லின் பொருள் யாது?

ஆடுபவன்

83) 'பிஸ்ர காவியம்' என்றால் என்ன?

செய்யுளும் வசனமும் கலந்த நிலையிலுள்ள காவிய அமைப்பு

84) 'திருஸ்டகாவியம்' என்று அழைப்பது எதனை?

கேட்டும் பார்த்தும் ரசிக்கின்ற நாடகங்களை

85) நாடக வகை எத்தனை என்று சமஸ்கிருத மரபு கூறுகின்றது?

பத்து வகை

86) பரதநாட்டியம் எப்பிரதேசத்திற்குரியது?

தென் இந்தியா

87) ரசம் என்ற சொல் உருவாக்கம்?

'ரஸ்' என்பன அடியாகக் கொண்டு சாரம், இனிமை சுவை, சாறு என்னும் அர்த்தங்களை உடையது.

88) பாவத்தினை இரண்டு வகைப்படுத்துவர். அவை?

1. ஸ்தாயி பாவம்
2. சஞ்சாரி பாவம்

89) ஆற்றுவோனிற்கு சமனாக சமஇதயம் உடைய பார் வையாளனை பரதர் எவ்வாறு கூறுகின்றார்?

சகிர்தயன் (சஹிர்தயன்)

90) குரூர அரங்கின் முன்னோடியாகத் திகழ்பவர்?

ஆர்த்தோ

91) நடிகனிடம் உணர்வோட்ட தசை மண்டலத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியவர்?

ஆர்த்தோ

92) சர்வதேசத்திற்கும் பொதுவான ஒரு நடிப்புப் பாணியை உருவாக்க பாடுபட்டவர்?

பீற்ற புறூக்

93) நெறியாளுகை என்றால் என்ன?

அருபமான நிலையிலிருக்கும் நாடகத்தை உருவ நிலைப்படுத்தும் செயற்பாடாக நெறியாளுகை அமையும்.

94) நடிகன் தன்னைத் தானே நெறிப்படுத்தும் அரங்கு

ஓராள் அரங்கு

95) நெறியாளரின் பிரதான பணி?

நாடக பாடத்தை அரங்க நிலையில் வைத்துவியாக் கியானம் செய்தல்.

96) விலாசம், இசை நாடகம் போன்றவற்றில் நெறியா ளரை எவ்வாறு அழைப்பர்?

அண்ணாவியார், மாஸ்டர், வாத்தியார்

97) கூத்தில் நெறியாளுகை

ஆடலையும், பாடலையும் பயிற்றுவிப்பதாக அமையும்

98) இசை நாடகத்தில் நெறியாளுகை

பாடலைப் பாட பயிற்றுவிப்பதாக அமையும்

99) நெறியாளரை வேறு எவ்வாறு அழைப்பர்?

இயக்குனர்

100) மேடையில் சர்வாதிகாரி என அழைக்கப்படுபவர்?

நெறியாளர்

101) நெறியாளர் பாரம்பரிய அரங்குகளில் எவ்வாறெல் லாம் காணப்படுவார்?

நடிகனாக, எடுத்துரைஞ்னாக பாடுதல், வசனம் பேசுதல் தாளக்கட்டுக்களை உச்சரித்தல், கூத்தில் தாளத்தையும், இசை நாடகத்தில் சுருதியையும் பேணுவதில் கூடிய கவனம் எடுப்பார்

102) எக் கூத்துப் பாரம் பரியத்தில் சில பெண் நெறிய ளர்களும் காணப்படுகின்றனர்?

கத்தோலிக்க கூத்துப்பாரம்பரியம்

103) பரதர் கூறும் மூவகையான அரங்கக் கட்டிடங்கள் எவை,

1. முக்கோணம் - திரியஸ்திர
2. சதுரம் - சதுரஸ்திர
3. செவ்வகம் - விகிர்தசிரஸ்

104) அளவுகளின் அடிப்படையில் அரங்குகளை 3 ஆகப் பிரிக்கிறார்

1. பெரியஅரங்கு - (சேஸ்டிம)
2. மந்தியஅரங்கு - (மத்திய)
3. சிறியஅரங்கு - (அபர)

105) பெரிய அரங்கை யாருக்கு உரியது என்கிறார்?
தேவர்க்கு உரியது.

106) மத்திய அரங்கை யாருக்கு உரியது என்கிறார்?
அசுரர்களிற்கு

107) மனிதர்களிற்கு உரிய அரங்கு எது?
சிறிய அரங்கு

108) சிறந்த அரங்கு என்று பரதர் கூறும் அரங்கு
மத்திய அரங்கு

109) சமஸ்கிருத நாடகங்கள் 5 பகுதிகளாக கொண்டது அவை?
ஆரம்பம், பிரயந்தனம், பிரத்தியாசம், நியதாதி சமம்

110) நான்கு வகையான கதாநாயகர்கள் பற்றி நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது. அவர்களைத் தருக?

1. கிரலலித - மகிழ்ச்சி உடையவை
2. தீரசாந்த - அமைதியும், உயர் பண்பும் மிக்கவை
3. தீரோதத்த - உறுதியானவர்கள்
4. தீரோதாத்த - தீரம் உடயவை, அவாக் கொண்டாவை.

111) அரிஸ்டோட்டல் எழுதிய நூலின் பெயர்?
கவிதை இயல்

112) இந்நூல் எக்காலத்திற்குரியது?
கி. மு. 4ம் நூற்றாண்டு

113) கவிதை இயல் எதனைப் பற்றியது?

இலக்கியம் - கவிதை பற்றியது

114) கவிதையியலில் நாடகம் எவ்வாறு கூறப்படுகின்றது?

நாடகம் என்பது போலச் செய்யும் கலை வடிவம்

115) மூன்று நாடக வகைகளை கூறி உள்ளார். அவை எவை?

1. அவலச்சுவை
2. மகிழ்நெறி
3. சற்றயர்

116) அவலச் சுவை நாடகங்கள் எதனைப் பற்றிக் கூறின?

விதிக்கும் சாபத்திற்கும் இடையில் மனிதன் கொள்ளும் மோதல் பற்றியது

117) அவலச்சுவையின் பகுதிகளென ஐந்து விடயங்களை அரிஸ்டோட்டில் கூறுகிறார் அவை எவை?

1. கதைப்பின்னல்
2. இசை
3. பெருங்காட்சி
4. பாத்திரம்
5. சிந்தனை

118) மூன்று முக்கிய பாத்திரங்களை அவலச்சுவை நாடகம் தன்னகத்தே கொண்டிருக்கும் அவை எனை?

1. அவலநாயகன்
2. செய்தியாளன்
3. கோறஸ்

119) நாடகமும் மைகளாக கவிதை இயல் கூறுவது?

1) காலம்
2) இடம்
3. இயக்கம்

120) சோகம் எந்த ரசத்திற்குரியது என்கிறார் பரதர்?
கருணை

121) நாட்டிய சாஸ்திரம் பயானகம் எந்த பாவத்திற்குரியது என்று கூறுகின்றது?
பயம்

122) ஆற்றுகைக் கலையின் இயல்புகள் இரண்டு தருக?
இயங்கும் கலைகள் (Dynicmic Arts)
வாழ்க்கையை பெரிதும் ஒத்த தன்மைகள் காணப்படும்.

123) கலையரசு சொர்ணலிங்கம் எழுதிய நூல் ஒன்றின் பெயர் தருக?
நாடகமும் நானும்

124) பரிமாற் கலைஞன் என்றழைக்கப்படுபவர் யார்?
வி. கே. நாராயண சாஸ்திரிகள்

125) நாடகத்தினை வியாக்கியானம் செய்கின்ற கலைஞன் யார்?
நெறியாளர்

126) இராம நாடகத்தின் ஆசிரியர் யார்?
அருணாசலக் கவிராயர்

127) 'ஈழத்து தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்ற நூலின் ஆசிரியர்?
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்)

128) இ. முருகையனின் நாடகம் ஒன்று தருக?
''உயிர்த்த மனிதர் கூத்து''

129) 'புதியதொரு வீடு' பா நாடக ஆசிரியர் யார்?
து. உருத்திரமூர்த்தி (மஹாகவி)

130) 'நாட்டிய சாஸ்திரம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?

பரதமுனிவர்

131) 'ரசம்' பற்றி கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி என்ன கூறுகிறார்?

'எது சுவைக்கப்படுகிறதோ எது அனுபவிக்கப்படுகிறதோ எது திருப்தியையும் மனமகிழ்ச்சியையும் தருகிறதோ அது ரசம்'

132) ரசக் கோட்பாட்டில் பாவத்தினை எத்தனை வகையாகப் பிரிப்பர்?

இரண்டு வகை

133) அவை எவை?

1. ஸ்தாயி பாவம்
2. சஞ்சாரி பாவம்

134) நடிகன் எவ்வாறு பாவத்தை வெளிப்படுத்துவான்?

அபிநயங்கள் ஊடாக நடிகன் பார்வையாளருக்கு உணர்த்துகிறான்.

135) குறொட்டஸ்கீயின் அரங்கு எத்தகையது?

பரிசேததனை அரங்கு (ஆய்வுகூட அரங்கு)

136) கண்ணிற்குப் புலனாகாத அரங்கின் முன்னோடியார்?

ஒகஸ்ராப் போல்

137) 'முறமைக் கோட்பாட்டை' முன் வைத்து அரங்கில் செயற்பட்டவர்?

சனிஸ்ல வெஸ்கி

138) 'பரத கலை' எனும் நூலை எழுதியவர்?

பத்மா சுப்பிரமணியம்

139) நவீன கவிதையின் தந்தை எந்த நாட்டவர்?

அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்

140) ஆற்றுகைக் கலையின் இயல்புகள் மூன்று தருக?

1. பார்வையாளரை உடன் எதிரே கொண்ட கலைகள்
2. பிறக்கும் கணத்திலே இறக்கும் தன்மை கொண்டது
3. இதனால் ஒவ்வோர் கணத்திலும் புதிதாகப் பிறக்கும்

141) நாடகத்தையும் அரங்கையும் பிரித்துபார்க்கமுடியுமா

இல்லை அரங்கின்றி நாடகம் இல்லை நாடகம் அரங்கிலே முழுமை அடைகின்றது

142) நாடகத்தின் இரண்டு பிரதான மூலகங்களும் எவை?

நடிகன், பார்வையாளர்

143) யார் இன்றி ஆற்றுகை முழுமை பெறுவதில்லை?

பார்வையாளர் இன்றி

144) 'காலம் தோறும் நாட்டியக்கலை' என்னும் நூலை எழுதியவர் யார்?

கார்த்திகா கணேசன்

145) 'சிவானந்த நடனம்' எனும் நூலின் ஆசிரியர் யார்?

கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி

146) ''கூடி விளையாடு பாப்பா'' எவ்வகை நாடகத்தைச் சேர்ந்தது?

சிறுவர் நாடகம்

147) கால வெளிக்கலைக்கு உதாரணம் 2 தருக?

நடனம், நாடகம், சலனப்படம்

148) ஆக்கும் கலைகள் (Marking Art) எவை?

ஓவியம், சிற்பம், கட்டடம்

149) ஆற்றுகைக் கலையின் இயல்புகள் இரண்டு தருக?

காலவெளிக் கலையாக இருக்கும்

உயிர் உள்ள மனிதர்கள் உயிர் உள்ள மனிதர் முன்பாக ஆற்றுகை நடத்துவர்.

150) கலையும் விஞ்ஞானமும் வேறுபடுத்துக?

கலை உணர்ச்சி பூர்வமானது விஞ்ஞானம் அறிவு பூர்வமானது

151) காற்றை சுதந்திரமாக சுவாசிப்பது போல வெளிப்பாடுகளும் இயல்பானதாக இருத்தல் வேண்டும் என்று கூறிய நாடக கோட்பாட்டாளர் யார்?

குறொட்டஸ்கி

152) காலக் கலை ஒன்று தருக?

இசை

153) செவிப்புலக் கலைக்கு உதாரணம் தருக?

இசை

154) நடனத்தின் ஜீவநாடியாக தொழிற்படுவது எது?

தாளம்

155) இந்திய மரபிலே சுருதி எவ்வாறு அழைக்கப்படும்?

சுருதி - மாதா

156) இசையின் பிதாவாக தொழிற்படுவது எது?

லயம் - பிதா

157) கேட்க்கப்படுகின்ற இசையானது அரங்கில் எவ்வாறு செயற்படும்?

பார்க்கப்படுகின்ற இசையாக

158) நாடக பாடம் எப்போது உருவம் பெறுகின்றது?

ஆற்றுகையின் போதே உருவம் பெறுகின்றது

159) நாடகத்தின் மிகமுக்கியமான இரண்டு கூறுகள்?

நடிகன், பார்வையாளர்

160) காட்சிகளை பாடலூடாக சொல்லுகின்ற மரபு எங்கே காணப்படுகின்றது?

கூத்துக்களில்

161) அரங்க மூலகங்களை நான்காக வகுத்துக் கூறுபவர்?

பீற்ற புறூக்

162) அவை எவை?

ஒளி, மொழி, அசைவு, வெளி

163) காண்பியங்கள் (Visuals) சில தருக?

1. நடிப்பு
2. வேடத்தை ஒப்பனை
3. அரங்க வெளி
4. ஒளி அமைப்பு
5. காட்சி விதானிப்பு

164) 'பாத்திர நிலைப்படுதல் என்றால் என்ன?

ஒருவர் தன்னை மறைத்து தன்னில் பாத்திரத்தினை காவுதலே ஆகும்.

165) நடிப்புக் கூறுகளை அபிநயம் என்ற பெயரில் கூறுபவர்?

பரதர் (நாட்டிய சாஸ்திரம்)

166) சுழன்று ஆடுகின்ற ஆற்றுகைத் தன்மை பெரும்பாலும் எதில் காணலாம்?

கூத்துக்களில்

167) கிரேக்கத்தில் அறிவியல் மையமாக இருந்த இடம்எது?

எதன்ஸ்

168) அரிஸ் டோட்டல் எழுதிய இலக்கியம் சார் நூல் எது?

கவிதையியல்

169) இது எத்தனையாம் நூற்றாண்டுக்குரியது?

கி. மு. 4ம் நூற்றாண்டிற்கு

170) 'கவிதை இயல்' நாடகத்தினை எவ்வாறு பார்க்கின்றது?

இலக்கியமாகவே (நாடக பாடமாகவே) பார்க்கின்றது.

171) உரையாடல் இல்லாது நடித்துக் கருத்தை வெளிப்படுத்தும் முறையை எவ்வாறு அழைப்பர்?

ஊமம்

172) நடிகன் தெரிவின் வகைகள் மூன்றாகும் அவை எவை?

திறந்த தெரிவு
மூடிய தெரிவு
சல்லடைத் தெரிவு

173) நாடககத்திற்கு எப்போதும் இன்றியமையாத மூலகங்கள் இரண்டு தருக?

நடிகனும் பார்வையாளரும்

174) நாடகத்தில் நல்லநடிகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந் நாடகம் எத்தனை சதவீதம் வெற்றியடைந்துள்ளது என்பது பொருள்?

50·/. (சதவீதம்)

175) நடிப்புப் பயிற்சியின் போது முக்கியமாக கவனிக்கப்படும் மூன்றும் எவை?

உடல், மனம், குரல்

176) குரலானது உடலின் ஐந்து இடங்களிலிருந்து மேலெழுவதாக கூறப்படுகின்றது அவை எவை?

அடி வயிறு, நெஞ்சு, மிடறு, மூக்கு, உச்சந்தலை

177) பீதியூட்டும் ஒலிகள் எதனால் எழுப்பப்படுகின்றன?

உச்சந் தலையிலிருந்து

178) மொழியற்ற மொழியால் உரையாடுவதற்கானபயிற்சி எவ்வாறழைக்கப்படும்?

'கீப்பறீச் பயிற்சி'

179) பாத்திர நிலைப்படுதலில் இரண்டு தளங்கள் இணைந் திருக்கும் அவை எவை?

பௌதீகத் தளம்

உளவியல் தளம்

180) நாடக நெறியாள்கையின் முக்கிய நோக்கம் யாது?

நாடகபாடத்தை அரங்க நிலையில் வைத்து வியாக்கி யானிப்பது ஆகும்.

181) ஒப்பனையின் மூன்று வெவ்வேறு வகைகளும் எவை?

1. நேரடி ஒப்பனை
2. குறியீட்டு ஒப்பனை
3. நடு நிலை ஒப்பனை

182) ''மணமும் மரணமும் விதியால் அமைவது'' என்று கூறுபவர்?

ஷேக்ஸ்பியர் - வாணிபுர வணிகன்

183) ரஸ்சியப் புரட்சியை எதிர்வு கூறும் நாடகமாக எதிர்பார்க்கப்படுவது எது?

அன்ரன் செக்கோ எழுதிய செரிப்பழத் தோட்டம்

184) நாடகம் யாருடைய கலையாகப் பார்க்கப்படுகின்றது

நடிகரின் கலையாக

185) இரு நாடகம் எனும் நூலிலுள்ள நாடகங்கள் எவை?

1. பொருளோ பொருள்
2. தவறான எண்ணம்

186) P. S. இராமையா எழுதி கலையரசு சொர்ணலிங்கத் தால் தயாரிக்கப்பட்ட நாடகம் யாது?

''தேரோட்டி மகன்''

187) கூத்துக் களரி என்பது யாது?

கூத்தாடுவதற்கு ஏதுவாக அமைக்கப்படுகின்றமேடை

188) புதியதொரு வீடு நாடகத்தை எழுதியவர் யார்?

து. உருத்திரமூர்த்தி (மஹாகவி)

189) நாடகத்தில் அடங்கும் நாடகங்சள் எவை?

கர்ணனன் கூத்து, முருகன் திருகுதாளம், உடையார் மிடுக்கு, நாட்டவன் நகரவாழ்க்கை

190) N. S. கிருஸ்ணனால் நாடக உலகின் இமயமலை என வர்ணிக்கப்பட்டவர் யார்?

து. ந. சங்கரதாஸ் சுவாமிகள்

191) கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை எழுதி நெறிப்படுத்திய நாடகும் யாது?

''தாளக் காவடி''

192) ''பொய்க்கால்'' நாடகத்தை எழுதி நெறிப்படுத்தியவர் யார்?

திரு. க. சிதம்பரநாதன்

193) உலகப் புகழ் பெற்ற இங்கிலாந்தின் நாடகாசிரியர் யார்?

வில்லியம் ஷேஸ்பியர்

194) கோடை என்ற பா நாடகத்தை எழுதிய நாடகாசிரியர் யார்?

மஹாகவி (உருத்திரமூர்த்தி)

195) கர்ணன் போர் நாடகத்தில் ''கர்ணன்'' பாத்திரமேற்று நடித்தவர் யார்?

பேராசிரியர் சி. மௌனகுரு

196) கி. மு. 4ம் நூற்றாண்டில் கவிதையியல் எனும் நூலை எழுதியவர்?

அரிஸ்டோட்டில்

197) நடிகன் என்பவன் பாத்திரமாகவே வாழவேண்டும் எனக் கூறுபவர்?

சனிஸ்ல வெஸ்கி

198) நாடக மும்மைகள் என்பவற்றில் அடங்குபவை?

காலம், இடம், இயக்கம்

199) அவலச்சுவை நாடகமானது மூன்று முக்கிய கதா பாத்திரங்களைக் கொண்டிருக்கும் என அரிஸ்டோட் டல் கூறுகின்றார். அவை எவை?

அவலநாயகன், செய்தியாளன், கோறஸ்

200) அவலச்சுவையின் பகுதிகளென 5 விடயங்களை அரிஸ் டோட்டல் கூறுகின்றார் அவை எவை?

1. கதைப்பின்னல்
2. இசை
3. பெருங்காட்சி
4. பாத்திரம்
5. சிந்தனை

மேலதிக பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மேல திக் விபரங்களை அறிந்து கொள்வதற்கும் வசதியாக நீங்கள் நாடவேண்டிய இடங்கள்

## ✲ NEW VENAGANAM ✲

16/2 KACHCHERI NALLUR ROAD,
JAFFNA.

## ✲ யுரேனியம் கல்வி நிலையம் ✲

(ஸ்ரீ ராம மந்திரம், மாளிகை)
கனகசபை வீதி,
மானிப்பாய்.

★ 226, பிறவுண் வீதி, ★
யாழ்ப்பாணம்.

**எதிர்பாருங்கள்!**

**வெகுவிரைவில்!!...**

- நாடகமும் அரங்கியலும் பகுதி IIல் பிரிவு Iற்கான வினா விடைத் தொகுதி.
- நாடகமும் அரங்கியலும் பகுதி IIIல் பிரிவு Iற் கான வினா விடைத் தொகுதி.
- கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள் உள்ளடக்கப் பெற்றவையாக வெளிவருகின்றன.

நன்றி

# யுரேனியம் கல்வி நிலையம்

கனகசபை வீதி,
மானிப்பாய்.

## G. G, E, O/L வகுப்புக்கள் நடைபெறுகின்றன

| | | |
|---|---|---|
| தமிழ் | - | திரு. M. M. மயூரதாஸன் |
| கணிதம் | - | திரு. G. கபிலன் |
| சங்கீதம் | - | திரு. T. கீதன் |
| விஞ்ஞானம் | - | திரு. R. ரமணன் |
| வர்த்தகம் | - | திரு. S. சயந்தன் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | } | திரு. T. K. பிரியன் |
| புவியியல் | - | திரு. S. A. குமரன் |
| ஆங்கிலம் | - | திரு. S. ரவீந்திரன் |
| சமயம் | - | திரு. M. M. மயூரதாஸன் |

# யுரேனியம்
# • கல்வி நிலையம் •

**ஸ்ரீ ராமமந்திரம் (மாளிகை)**
**கனகசபை வீதி,**
**மானிப்பாய்.**

G. C. E. A/L கலை, வர்த்தக
வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தமிழ் - M. M. **மயூரதாஸன்**
அளவையியல் - T. K. **பிரியன்**
புவியியல் - S. A. **குமரன்**
நாடகமும் அரங்கியலும் - A. **அகிலன்**
இந்து சமயம் - S. **சிறி**
இந்து நாகரீகம் - M. M. **மயூரதாஸன்**
பொருளியல் - **பிரபல ஆசிரியர்**
கணக்கியல் - **சயந்தன்**
வர்த்தகம் - S. **சுதர்சன்**

✡ ஆண்டு 5 முதல் O/L வரை சகல
வகுப்புக்களும் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன.

**இந் நிறுவனத்தில் சகல பாடங்களும்**
**தனித்துவமான ஆசிரியர் குழுவினால்**
**போதிக்கப்படுகின்றன.**


ஷாமளி அச்சகம் 185, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.